# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை03 வியாழக்கிழமை 15.01.2025 கதிர் 98







## மன்னார் நீதிமன்றம் முன்பாகப் பயங்கரம்

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு

### மேலும் இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

வழக்கொன்றுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்த வர்களை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

7➤

## இலங்கை மீண்டெழ தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் இந்தியா

### தூதுவரிடம் சஜித் நேரில் கோரிக்கை



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

பொருளாதார, சமூக, மற்றும் அரசியல் விவகாரங்கள் பல குறித்து இங்கு இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதோடு, அருகிலுள்ள அண்டை நாடு என்ற வகையில் பல தசாப்தங்களாக இந்திய அரசு

7➤

## இலங்கை சிங்கள பௌத்த நாடு


### கஜேந்திரகுமார் துள்ளக்கூடாது என்று மேர்வின் எச்சரிக்கை

"இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடாகும். எனவே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் இங்கு துள்ளக்கூடாது." - என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை என்பது சிங்கள தேசமாகும். வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என ஒருவர் இருக்கின்றார். அவர் பௌத்த சாசனத்துக்கு எதிராகக் கூக்குரல் எழுப்புகின்றார். எமது நாட்டில் அவ்வாறு செய்ய முடியாது.

7➤



## கரையொதுங்கிய மர்ம வீட்டில் 18 புத்தர் சிலைகள்



யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் பகுதியில் நேற்று கரையொதுங்கிய மர்ம வீட்டிலிருந்து 18 புத்தர் சிலைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக கடல் நிலை மாற்றங்களால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல் மற்றும் நிலநடுக்கம் போன்றவை பல தென் கிழக்கு ஆசியா நாடுகளில் ஏற்பட்டு வருகின்றன. இதன்போது மியன்மாரில் இருந்து இந்த நினைவாலயம்

7➤

## இந்தியத் தூதுவருடன் நாமல் எம்.பியும் பேச்சு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பியுடன் பேச்சு நடத்தினார்.

இந்தியா - இலங்கை இடையேயான பன்முகத் தன்மை கொண்ட பிரச்சினைகள், வளர்ச்சித் திட்டங்கள், முதலீடுகள், இலங்கையின் பொருளாதார

7➤

## யாழில் அதீத போதையுடன் இரண்டு மாணவர்கள் கைது

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலையொன்றின் இரண்டு மாணவர்கள் அதீத போதையுடன் பொலிஸாரால் நேற்று

7➤



## பாடசாலை மாணவி கடத்தல்: சந்தேகநபர்களுக்கு மறியல்

கண்டியில் பாடசாலை மாணவி ஒருவர் வானில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதிவான் நீதி மன்றம் உத்தர விட்டுள்ளது.

கண்டி, கம்பளை,

7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மின் கட்டண திருத்தம் குறித்த அறிவிப்பு



கொழும்பு, ஜன 16

மின்சார கட்டணங்கள் 20 முதல் 30 சதவீதம் வரை குறைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் இந்த பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட மின்சார கட்டண திருத்தம் குறித்த மேல் மாகாண பொது ஆலோசனை கொழும்பில் உள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கு நடைமுறைக்கு வரும் மின்சாரக் கட்டணங்கள் குறித்த இறுதி முடிவு, பொதுக் கலந்தாய்வின் போது முன்வைக்கப்படும் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, இந்த வார இறுதிக்குள் அறிவிக்கப்படும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத் திருத்தம் குறித்த பொதுமக்களின் கருத்துகள் தற்போது ஒன்பது மாகாணங்களிலும் நிறைவடைந்துள்ளதாக ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மின் கட்டண திருத்தம் தொடர்பான பொது ஆலோசனை கடந்த 10 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

மேலும், அரசியல்வாதிகள், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு எரிசக்தி சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு எரிசக்தி சங்கங்களின் கிட்டத்தட்ட 400 பிரதிநிதிகள் இந்த மாகாண அமர்வுகளில் பங்கேற்றுள்ளனர்.

மின்சார கட்டண திருத்தம் குறித்த பொதுமக்களின் கருத்துக்கள் கடந்த டிசம்பரில் மத்திய மாகாணத்தில் தொடங்கியது, பின்னர் பொதுப் பயன்பாட்டு ஆணையம் மற்ற மாகாணங்களிலும் அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஐ)



# பாண் விலை தொடர்பான அறிவிப்பு

கொழும்பு, ஜன 16

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 25 ரூபாவினால் குறைக்கும் பட்சத்தில், பாண் ஒன்றினை 100 ரூபாவில் நுகர்வோருக்கு வழங்க முடியும் என அகில இலங்கை பேக்கரி சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக, வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அகில இலங்கை பேக்கரி சங்க பிரதிநிதிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

இதன்போது, பாண் விலை அதிகரிப்பினால் பாண் பாவனை ஓரளவு குறைந்துள்ளதாகவும் பேக்கரி உரிமையாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

டொலரின் விலை குறைந்துள்ள போதிலும் ஒரு கிலோ கோதுமை மாவை 190 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதேவேளை கோதுமை ஒரு கிலோவுக்கு 45 ரூபா வரி குறைகப்பட்டு, கோதுமை மாவை இறக்குமதி செய்ய எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கினால், நிறுவனங்களின் ஏகபோக உரிமை உடைக்கப்படும் எனவும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், பேக்கரி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும், அதற்காக கோதுமை மா மற்றும் வெண்ணெய் இறக்குமதியாளர்களை அழைத்து உடனடியாக கலந்துரையாடல் நடத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

மேலும் இந்த கலந்துரையாடலில், அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன உள்ளிட்ட பேக்கரி உரிமையாளர்கள் குழு கலந்துகொண்டுள்ளனர். (ஐ)

# வாழைச்சேனையில் இ.போ.ச பேருந்து மீது கல்வீச்சு தாக்குதல்

கொழும்பு, ஜன 16

யாழ்ப்பாணத்தில் இருந்து கல்முனைக்கும் மற்றும் வாழைச்சேனையில் இருந்து பொத்துவில் நோக்கி பிரயாணித்த இரு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் மீது வாழைச்சேனை சுங்கான்கேணி 18ஆவது மைல் பிரதேசத்தில் இனம் தெரியாதோரினால் கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்று இரவு 07.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், பேருந்துகள் வழமைபோல போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சுங்கான்கேணி பிரதேசத்தில் திடீரென பேருந்துகள் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டதையடுத்து, பேருந்துகளின் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளன

எனினும், அதில் பிரயாணிகள் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. இதனையடுத்து பேருந்துகள் அங்கு நிறுத்தப்பட்டு அதில் இருந்த பிரயாணிகளை வேறு பேருந்துகளில் அனுப்பப்பட்டுள்ளதாக பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# புகைப்பட கண்காட்சியால் அதிருப்தி அடைந்துள்ள ரஷ்யா!

கொழும்பு, ஜன 16

கொழும்பு - சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும் உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சியில் ரஷ்ய எதிர்ப்பு கண்காட்சிகளை அனுமதிக்கும் முடிவுக்கு அந்நாட்டு தரப்பு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பிற்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ஜாகரியன இந்த நடவடிக்கையால் சற்று ஏமாற்றத்தை வழங்கியுள்ளதாக கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

“இலங்கை பத்திரிகை நிறுவனம் மற்றும் கொழும்பில் சுதந்திர சதுக்க வளாகத்தில் நடத்தப்பட்ட கண்காட்சியில் ரஷ்ய எதிர்ப்பு புகைப்படங்களால் தூதரகம் கலக்கமடைந்துள்ளது.

மேற்கத்திய மற்றும் உக்ரைன் சார்பான விளக்கத்தை வலியுறுத்தி, உக்ரேனிய பிராந்தியத்தில் தற்போதைய நிகழ்வுகளை ஒரு பக்கச்சார்பான மற்றும் ஒருதலைப்பட்சமான முறையில் இந்த உள்ளடக்கம் பிரதிபலிக்கிறது.

அதே நேரத்தில், டான்பாஸில் வசிப்பவர்களுக்கு எதிரான ஜெலென்ஸ்கி ஆட்சியின் குற்றங்கள், உக்ரைனின் ரஷ்ய மொழி பேசும் மக்களின் உரிமைகளை மீறுதல், ரஷ்ய பத்திரிகையாளர்களை குறிவைத்து கொலை செய்தல் மற்றும் கியேவ் நாஜி ஆட்சிக்குழுவால் மின்ஸ்க் ஒப்பந்தங்களின் துரோக மீறல் குறித்து இங்கு வெளிப்ப டுத்தப்படவில்லை” என கூறியுள்ளார். (ஐ)

# நாமல் குமாரவின் விளக்கமறியல் நீடிப்பு

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அவதூறு ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் நாமல் குமாரவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக நேற்றைய தினம் வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், நாமல் குமார கோட்டை பிரதான நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் நாமல் குமாரவின் சுகவீன நிலை குறித்து அவரது வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்த நிலையில், அவருக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்க சிறைச்சாலை நிர்வாகத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் நாமல் குமார மற்றும் இன்னொரு சந்தேக நபரின் தொலைபேசி அழைப்பு விபரங்களைப் பெற்றுக் கொள்ள பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

# விபத்தில் பலியான முன்னாள் போராளி

*கொழும்பு, ஜன 16*

*மாற்றுத்திறனாளியான விடுதலைப் புலி களின் முன்னாள் போராளி ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் அவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*வீதியில் நடந்து சென்ற மாற்றுத்திறனாளியான குறித்த முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளி, மீது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி, விபத்துக்குள்ளாக்கியதுடன் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர்கள் மோட்டார் சைக்கிளை அங்கு விட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இந்த விபத்து சம்பவம், நேற்றிரவு (15) மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் கைவிட்டுச் சென்ற மோட்டர் சைக்கிளை மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளதாக தெரிவித்துள்ளனர்.*

*வாழைச்சேனை கறுவாக்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய விஜயநாதன் வினோசித் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*குறித்த நபர் வாழைச்சேனை கிரான் வீதியிலுள்ள ஐஸ் உற்பத்திசாலைக்கு அருகாமையிலுள்ள மதுபானசாலை ஒன்றில் இருந்து சம்பவதினமான நேற்றிரவு 8.30 மணிக்கு வீடு செல்வதற்காக வீதிக்கு நடந்து வந்துள்ளார்.*

*இதன்போது, வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதி விபத்துக்குள்ளானதில் வீதியில் வீழந்து சம்பவ இடத்திலே உயி ரிழந்ததையடுத்து மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றவர் அதனை அங்கு விட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளார்.*

*இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)*

# கொட்டடியில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீது வாள்வெட்டு



பருத்தித்துறை, ஜன 16

யாழ். பருத்தித்துறை - கொட்டடிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீதே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை - கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த ஜெயதீபன் கண்ணன் (வயது 28), விஜயராசா செந்தூரன் (வயது 29) ஆகிய இருவரும் தலை மற்றும் கால் பகுதிகளில் வெட்டுக்காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் தொலைபேசி மூலம் பருத்தித்துறை - கொட்டடியைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளருக்குத் தொடர்பு எடுத்த நபர் ஒருவ நீ தானே எம்.பி.பி. அமைப்பாளர். கரையோரப் பகுதிகளில் தேசிய மக்கள் சக்திக்காக நீதானே வேலை செய்கின்றாய்? உங்கள் கொட்டத்தை அடக்க உங்களது இடத்துக்கு வாள்வெட்டுக் குழுவென்று வருகின்றது பார்த்துக்கொள் என்று கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்துள்ளார்.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்து சுமார் பத்து நிமிடங்களில் கொட்டடிப் பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்தவர்களைத் துரத்தித் துரத்தி சரமாரியாக வெட்டியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை அமைப்பாளரின் சகோதரன் உட்பட இருவர் படுகாயடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குத் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் வருகை தந்து விடயங்களை ஆராய்ந்த பின்னர் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் சென்று பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடிச் சென்றனர்.

தாக்குதல்தாரிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பருத்தித்துறைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# மக்கள் கருத்துக் கேட்டல் நாளையுடன் நிறைவு

கொழும்பு, ஜன 16

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பொதுமக்களின் கருத்து பெறும் நடவடிக்கை 17ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத் திருத் தம் தொடர்பாக ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய செயல்முறை கடந்த ஆண்டு டிசம்பர் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அந்த அமர்வுகளின் போது சுமார் 400 நபர்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை பரிசீலித்தபோது, மின்சாரக் கட்டணத்தை சுமார் 20 சதவீதம் குறைக்க வேண்டும் என்பது தெரியவந்துள்ளது.

அதன்படி, இந்த கருத்துக்கணிப்புகளை ஆய்வு செய்த பிறகு மின்சார கட்டணங்களில் திருத்தம்செய்யப்பட வேண்டுமா? இல்லையா? அல்லது கட்டண திருத்தம் இருந்தால், அது எத்தனை சதவீதமாக இருக்கும்? என்பது போன்ற பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை நாளை (17) வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# யாழில் ஹைலேண்ட் பால்மா நிலையம் திறந்துவைப்பு



யாழ்ப்பாணம், ஜன 16

இலங்கை "மில்கோ - ஹைலண்ட் பால்மா" உற்பத்திப் பொருட்களை யாழ்.குடாநாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் ஆரம்ப நிகழ்வு சாவகச்சேரியில் இன்று இடம்பெற்றது.

யாழ்.சாவகச்சேரி நுணாவில் பகுதியில் "ஹைலண்ட் பால்மா" முகவர் நிலையத்தை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் திறந்து வைத்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# அஸ்வெசும கொடுப்பனவை அதிகரிக்க அனுமதி

கொழும்பு, ஜன 16

இந்த வருட இறுதி வரை அஸ்வெசும பயனாளிகளுக்காக வழங்கப்படவுள்ள நலன்புரி திட்டங்களுக்கும் தெரிவுக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்காக வழங்கப்படும் 15,000 ரூபா கொடுப்பனவை 17,500 ரூபா வரையிலும், 8,500 ரூபா கொடுப்பனவை 10,000 ரூபா வரையிலும், 2,500 ரூபா கொடுப்பனவை 5,000 ரூபா வரையிலும் அதிகரிப்பதற்கு அரச நிதி தொடர்பான தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், அஸ்வெசும கொடுப்பனவின்கீழ் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் குடும்பங்களுக்கான கொடுப்பனவுதொகையில்மாற்றங்களை மேற்கொள்ளாதிருக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

# புகை மூட்டிய மூதாட்டி உயிரிழப்பு



கொழும்பு, ஜன 16

நுளம்புக்குப் புகை மூட்டிய சமயம் சேலையில் தீப்பிடித்து உடல் கருகி மூதாட்டி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். கரவெட்டி மேற்கு - கவுடாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் பொன்னம்மா (வயது 81) என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

தனிமையில் வசித்து வந்த அவர் நுளம்புக்குப் பொச்சு மட்டையில் தீ வைத்தபோது அவரது சேலையில் தீ பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)

# 2,352 டெங்கு நோயாளர்கள் அடையாளம்



*கொழும்பு, ஜன 16*

*இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 2,352 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*அதிகளவான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.*

*இதன்படி, கம்பஹா மாவட்டத்தில் 374 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.*

*இதனைத் தொடர்ந்து கொழும்பு மாவட்டத்தில் 304 பேரும், காலி மாவட்டத்தில் 169 பேரும் பதிவாகியுள்ளனர். இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் இதுவரை டெங்கு நோயினால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)*

# சட்டம்–ஒழுங்கை பாதுகாக்க மகாராஷ்டிர அரசு தவறிவிட்டது: எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

இந்தியாவில் பிரபல நடிகர் சைஃப்அலிகான் மீது கத்துக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்க மகாராஷ்டிர அரசு தவறிவிட்டது என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர்.

இன்று அதிகாலை 2.00 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மும்பை பாந்த்ராவில் உள்ள அவரது வீட்டிற்குள் புகுந்த நபர் ஒருவர் அவரை கத்தியால் குத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலில் காயமடைந்த சைஃப்அலி கான் மும்பை லீலாவதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்.

அங்கு அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள் ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் மீது ஆறு முறை கத்தியால் குத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.






இது தொடர்பாக காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அதுல் லோண்டே கூறியதாவது மகாராஷ்டிர பா.ஜ.க. அரசு சட்டம்-ஒழுங்கை பாதுகாக்க தவறிவிட்டது. பிரபல நடிகர்களுக்கே பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுவிட்டது. பிரபலங்கள் வீடுகளில் குண்டு துளைக் காத ஜன்னல்கள் இருக்கும். அவர்களுக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களின் நிலை என்னவாகும். இதுபோன்ற சம்பவங்களால் மாநிலத்தின் முதலீடுகள் பாதிக்கும் என அவர் கூறியுள்ளார்.

தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே கூறியதாவது சைஃப் அலி கான் தாக்கப்பட்ட சம்பவம் கவலை அளிக்கிறது. அவர் மருத்துவமையில் நலமாக இருக்கிறார். இந்த சம்பவம் மும்பையில் பாதுகாப்பற்ற சூழலை ஏற்படுத்தி உள்ளது என அவர் கூறினார்.

பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் ராம்கதம் கூறுகையில் , 'சைஃப் அலி கானை தாக்கிய குற்றவாளி விரைவில் பிடிபடுவான். பொலிஸார் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்' என்றார்.

இந்தி நடிகை பூஜாபட், ஜூனியர் என்.டி.ஆர். உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாகவும், பயமாகவும் உள்ளது என்று பூஜா பட் தெரிவித்துள்ளார்.

# ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் வெற்றி, இந்திய விண்வெளி திட்டத்தின் புதிய வரலாற்று மைல்கல்- குடியரசு தலைவர்!





ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் வெற்றி, இந்திய விண்வெளி திட்டத்தின் புதிய வரலாற்று மைல்கல் என இந்திய குடியரசு தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இஸ்ரோ சார்பில் கடந்த டிசம்பர் 30 ஆம் திகதி அன்று ஸ்பேடேக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி ஆகிய 2 விண்கலன்களும் பிஎஸ்எல்வி சி-60 ராக்கெட் மூலம் ஏவப்பட்டு விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.

இதைதொடர்ந்து, விண்வெளியில் 2 விண்கலன்களை இணைக்கும் வகையில், இஸ்ரோ செயல்படுத்தி வந்த 'ஸ்பேடெக்ஸ்' திட்டம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணில் 2 செயற்கைக் கோள்களை டாக்கிங் முறையில் இணைக்கும் முயற்சியில் இஸ்ரோ வெற்றி கண்டுள்ளது.

2 விண்கலன்களை இணைக்கும் ஒருங்கிணைப்பு தொழில்நுட்பத்தை அறிந்த 4 நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் வெற்றிக்கு உழைத்த விஞ்ஞானிகளுக்கு புதிய இஸ்ரோ தலைவர் நாராயணன் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு குடியரசு தலைவர் திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், " இந்தியாவின் விண்வெளி திறன்களை உயர்த்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகள். ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் வெற்றியானது, இந்திய விண்வெளி திட்டத்தில் புதிய வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது" என்றார்.



# கடும் பனி மூட்டம்: ரயில் சேவையில் பாதிப்பு இந்திய ரயில்வே அறிவிப்பு!

வட மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு நிலவி வருகின்றமையால் டெல்லியில் ரயில் சேவையில் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதே போன்று உத்தரபிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட் போன்ற வடமாநிலங்களில் அடர்ந்த பனி மூட்டம் தொடர்ந்து நீடிக்கிறது.

அதன்படி பூர்வா எக்ஸ்பிரஸ், லக்னோ மெயில், பத்மாவத் எக்ஸ்பிரஸ், மேவார் எக்ஸ்பிரஸ், சிர்சா எக்ஸ்பிரஸ், ராஜ்தானி ஹவுரா எக்ஸ்பிரஸ், பிபிஎஸ் ராஜ்தானி, துரந்தோ எக்ஸ்பிரஸ், அயோத்தி எக்ஸபிரஸ், முசோரி எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட 29 ரயில்கள் தாமதமாக இயக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

கடும் பனிமூட்டம் காரணமாக டெல்லிக்கு மொத்தம் 29 ரயில்கள் தாமதமாக இயக்கப்படுவதாக இந்திய ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது

# இஸ்ரேல்–ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இந்தியா வரவேற்பு!



இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பினர் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் கூறும்போது, இந்த ஒப்பந்தம் காசா மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான மனிதாபிமான உதவிகளை வழங்கும் என்று இந்தியா நம்புகிறது.

காசாவில் போர் நிறுத்தம், பிணையக்கைதிகள் விடுதலை குறித்த ஒப்பந்தத்தின் அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம்.

அனைத்து பிணைக்கைதிகளையும் விடுவிக்கவும், போர் நிறுத்தம் செய்யவும், பேச்சுவார்த்தை பாதைக்குத் திரும்பவும் நாங்கள் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகிறோம் என்று தெரிவித்து உள்ளது.

# முல்லைப் பெரியாறு அணை: புதிய கண்காணிப்பு குழு அமைப்பு

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பான வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ளன. இவற்றில், அணை யின் நீர்மட்டத்தை 120 அடிக்கும் குறைவாக குறைக்க வேண்டும் எனக்கோரி கேரளாவைச் சேர்ந்த மேத்யூ நெடும்பரா என்பவர் தொடர்ந்த வழக்கும் நிலுவையில் உள்ளது. இவருடன் சேர்த்து இன்னும் சில வழக்கறிஞர்கள், முல்லைப் பெரியாறு அணை விவகாரங்களில் மத்திய அரசையும் எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டும் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவை சுட்டிக்காட்டி முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உடனடியாக குறைக்க உத்தரவிட வேண்டும் உள்ளிட்ட புதிய கோரிக்கைகளை முன்வைத்து சுப்ரீம் கோர்ட்டில் புதிய மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சூர்யகாந்த் மற்றும் திபங்கர் தத்தா அமர்வில் கடந்த 8 ம் திகதி விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில், அணை தொடர்பாக 7 பேர் கொண்ட புதிய கண்காணிப்பு குழுவை மத்திய அரசு அமைத்து உள்ளது. தேசிய அணைகள் பாதுகாப்பு சட்டப்படி அமைக்கப்பட்ட இக்கண்காணிப்பு குழுவின் தலைவராக, தேசிய அணை பாதுகாப்பு ஆணைய தலைவர் அனில் ஜெயின் நியமிக்கப்பட்டு உள்ளார்.



> பெண்கள் தங்களை உயரமாகக் காட்ட ஹீல்ஸ் அணிய வேண்டியது தவிர்க்க முடியாததகி விட்டது. ஹீல்ஸ் உள்ள செருப்புகளின் உயரம், அவர்க ளின் வேலை வாய்ப்பு, சமூக அந்தஸ்து என்று பல காரணிகளின் அளவைத் தீர்மானிக்கிறது. அழகாகக் காட்டுவதற்காக, அதிக உயரம் உள்ள ஹீல்ஸ் செருப்பை அணிவதால், உடல்நலம் எந்த அளவுக்குப் பாதிப்புக்கு உள்ளாகும்.



# காலணிக்காக கால்கள் இல்லை..!

முகத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை நாம் காலுக்குக் கொடுப்பது இல்லை. தினமும் கண்ணாடியில் முகம் பார்க்கும் நாம் ஒரு முறையாவது, பூமி மேல் அழுந்திப் பதியும் பாதத்தைப் பார்க்கிறோமா? அதேபோல், செருப்புகளை உங்கள் கண்கள் தேர்வு செய்யக் கூடாது. காலணிக்காக உங்கள் கால்கள் இல்லை உங்கள் கால்களுக்காகத்தான் காலணி. எனவே உங்கள் கால்தான் அதற்கேற்ற செருப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அழகாக இருக்கிறது என்று காலுக்குப் பொருந்தாத செருப்பை வாங்கக் கூடாது.

உயரத்தை வைத்தும் மனிதர்களை மதிப்பிடும் காலம் இது. குறைந்தது ஐந்தரை அடி உயரமாவது இருக்க வேண்டும் என்பதுதான் எல்லோருடைய எண்ணமும். உயரக் குறைவுப் பிரச்சனைக்கான அழகியல் தீர்வாக முதலில் ஹீல்ஸ் செருப்புகள் அறிமுகமாயின. இவற்றால் ஏற்படும் 'பின்' விளைவுகள் குறித்து இப்போதுதான் விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கி இருக்கிறது.

பெண்கள் தங்களை உயரமாகக் காட்ட ஹீல்ஸ் அணிய வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஹீல்ஸ் உள்ள செருப்புகளின் உயரம், அவர்களின் வேலைவாய்ப்பு, சமூக அந்தஸ்து என்று பல காரணிகளின் அளவைத் தீர்மானிக்கிறது. அழகாகக் காட்டுவதற்காக, அதிக உயரம் உள்ள ஹீல்ஸ் செருப்பை அணிவதால், உடல்நலம் எந்த அளவுக்குப் பாதிப்புக்கு உள்ளாகும்.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் பலரும் ஹீல்ஸ் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். திருமணம், பார்ட்டி போன்ற விசேஷங்களுக்குப் போகும்போது ஹீல் உயரம் ஒன்றரை இன்சுக்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அதுவும், பத்து நாட்களுக்கு ஒரு முறை சிறிது நேரம் அணிந்தால் காலுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

பெரிய ஹீல்ஸ் அணிந்து மணிக்கணக்கில் நின்று பணிபுரிபவர்களை 'புரஃபஷனல் ஹசார்ட்' (Professional Hazard) பாதிப்பு அதிகம் உள்ளவர்கள் என்பார்கள். இவர்களுக்குக் கால் பெருவிரலில் வீக்கம் (டீரஸைழெ) ஏற்படும். ஒருகட்டத்தில் காலின் வடிவமே மாறிவிடும். அதிக நேரம் நின்று பணிபுரிபவர்கள், ஸ்போர்ட்ஸ் ஷீ அணிவது நல்லது. இல்லையெனில் அவஸ்தைப்பட வேண்டியிருக்கும்.

நடிகைகள், மோடல்கள் உயரத்தைக் கூட்டுவதற்காக போயின்டட், பென்சில் ஹீல்ஸ்களை அணிகின்றனர். ஆனால், தற்போது, பத்து வயது நிரம்பும் பெண் குழந்தைகள்கூட ஹீல்ஸ் போடுகிறார்கள்.



போயின்டட் ஹீல்ஸ் மற்றும் பென்சில் ஹீல்ஸைத் தொடர்ந்து அணியும்போது, உடல் எடையைத் தாங்கி நிற்கும் பாதத்திலும், குதிகாலிலும் வலி ஏற்படும். இடுப்பு மற்றும் பின்பக்கத்தில் சதை போடும். ஸ்டூல் போன்று செருப்புகள் வந்துவிட்டன. பக்கிள்ஸ் வைத்த ஸ்டூல் செருப்பு பாதுகாப்பானதோடு, உயரமாகவும் காட்டும்.

ஹீல்ஸ் இல்லாமல் முழுவதும் தட்டையாக உள்ள செருப்புகளை இளம் வயதினர் அணியலாம். பாதிப்பு இருக்காது. ஆனால், வயது ஏற ஏற இதுபோன்ற செருப்பு அணிவதைத் தவிர்க்க வேண்டும். நம் காலின் வளைவிற்கு ஏற்ற செருப்பையே அணியவேண்டும்.

நம் சீதோஷண நிலைக்கு ரப்பர் செருப்புதான் பெஸ்ட். ரப்பர் செருப்பில் காற்று புகக் கூடியது (Breathable), காற்று புகாதது (Non-breathable) என இரண்டு வகைகள் உண்டு. இதில் காற்று புகக்கூடிய செருப்புதான் மிகவும் நல்லது. இந்த வகைச் செருப்பில் காற்று, காலின் அடிப்பாதம் வரை செல்லும். முன்பு தயாரிக்கப்பட்ட செருப்பின் அடிப்பகுதி மட்டும் பி.வி.சி (PVC)-யில் இருந்தது. ஆனால், தற்போது சில செருப்புகளில் மேல்பகுதியிலும் பி.வி.சி-தான் இருக்கிறது. இந்த வகைச் செருப்புகளை அறவே தவிர்க்கவும். சிலருக்குத் தோல் செருப்பு சௌகரியமாக இருக்கும். ஆனால், அதையே தொடர்ந்து அணியவும் கூடாது. பாதம் காற்றோட்டம் இல்லாமல் பாதிப்புக்கு உள்ளாகும்.

சிலருக்குப் பாதங்களில் அதிகமாக வியர்க்கும். அவர்கள் ஷீ, செருப்பு அணிவதற்கு முன்பு கொட்டன் சொக்ஸ் அணியலாம். வியர்வையைக் கொட்டன் உறிந்துகொள்ளும். கொட்டன் அடுக்கு ஒன்று சேர்த்தே செருப்புகள் விற்கின்றனர். அது உங்கள் காலுக்குப் பொருந்தினால் வாங்கலாம்.

அதிக எடை உள்ள செருப்பை அணிந்தால், கால் வலி, காய்ப்பு வரும். அதிக எடை இல்லாத செருப்பை அணியுங்கள். வேலைக்குத் தகுந்த மாதிரியான செருப்பை அணிவது நல்லது. இரவு படுக்கைக்குப் போகும் முன், பாதத்தில் தேங்காய் எண்ணெய் தடவிக்கொள்ளுங்கள்

மாலைக்கதிர்
Maalaikkathir



# 3,600 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு!




மெட்டா நிறுவன ஊழியர்கள் 3,600 பேரை பணி நீக்கம் செய்ய அதன் தலைவர் மார்க் ஜுக்கர்பெர்க் முடிவு செய்துள்ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரை தலைமையிடமாக கொண்டு பிரபல தொழில்நுட்ப நிறுவனமாக 'மெட்டா' இயங்குகிறது. பேஸ்புக், வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் போன்ற பிரபல சமூக வலைத்தளங்களை இது நிர்வகித்து வருகிறது. உலகம் முழுவதும் மெட்டா நிறுவனத்தில் 72 ஆயிரம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்தநிலையில் மெட்டா நிறுவன ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட உள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார். நிறுவனத்தை சீரமைக்கும் வகையில் 5 சதவீதம் அதாவது 3,600 ஊழியர்களை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டியல் தயாராகி வருகிறது.

அடுத்த மாதம் 10-ஆம் திகதிக்குள் அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பதிலாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் இருந்து நிலாவில் ஆய்வு நடத்த 2 லேண்டர்கள் அனுப்பி வைப்பு!



அமெரிக்காவில் இருந்து நிலவில் ஆய்வு நடத்துவதற்காக, ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனம் தனது 'பால்கன் 9' ராக்கெட் மூலம் 2 'லேண்டர்' சாதனங்களை நிலாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அமெரிக்காவில் கேப் கேனவரல் நகரில் உள்ள அமெரிக்க விண்வெளி மையமான 'நாசா'வின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து நேற்று அவை செலுத்தப்பட்டன.

கடந்த 1960-களில் இருந்து நிலவின் மேற்பரப்பில் 5 நாடுகள் மட்டுமே வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கி உள்ளன. முன்னாள் சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் ஆகியவைதான் அந்த நாடுகள்.

அதிலும், நிலவின் தென்துருவத்தில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இதற்கிடையே, 2 ஆண்டுகளுக்கு முன்பு, ஜப்பான் நாட்டின் 'ஐஸ்பேஸ்' நிறுவனத்தின் முதலாவது 'லேண்டர்' நிலவின் மேற்பரப்பில் மோதி விபத்துக்குள்ளானது. தற்போது, அந்நிறுவனம் தனது லேண்டரை மீண்டும் அனுப்பி வைத்துள்ளது. அதனுடன் 'ரோவர்' சாதனமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்காக நிலவில் அழுக்குகளை சேகரிக்க 'ரோவர்' சாதனம் பயன்படுத்தப்படும். எதிர்கால ஆராய்ச்சியாளர்களுக்காக நிலவில் உணவு மற்றும் நீர் ஆதாரம் இருக்கிறதா என்ற ஆய்வும் நடத்தப்படும்.

இதுபோல், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை சேர்ந்த 'பயர்பிளை ஏரோஸ்பேஸ்' நிறுவனத்தின் 'லேண்டர்' சாதனம் முதல் முறையாக நிலாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2 மீட்டர் உயரம் கொண்ட அந்த லேண்டர், முதலில் நிலாவை சென்றடையும். மார்ச் மாதத்தின் ஆரம்பத்திலேயே சென்றடையும் . ஆய்வுக்காக அழுக்குகளை சேகரிக்கும். மேற்பரப்புக்கு அடியில் நிலவும் வெப்பநிலை அளவிடப்படும்.

ஆனால், சற்று பெரிதான 'ஐஸ்பேஸ்' நிறுவனத்தின் லேண்டர் மெதுவாக பயணம் செய்யும். மே மாதம் அல்லது ஜூன் மாதத்தில்தான் நிலவில் தரையிறங்கும்.

மேற்கண்ட 2 லேண்டர்களும் ஒன்றாக ராக்கெட்டில் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், 1 மணி நேரத்துக்கு பிறகு, திட்டமிட்டபடி பிரிந்து, தனித்தனி சுற்றுவட்டப்பாதையில் பயணத்தை தொடர்ந்தன.



## காசா போர் நிறுத்த ஒப்பந்தம் முழுமை பெறவில்லை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு!

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு ஹமாஸ் உடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் முழுமை பெறவில்லை என்றும், இதுகுறித்த இறுதிக்கட்ட விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

முன்னதாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்கா மற்றும் கத்தார் அறிவித்த நிலையில், நெதன்யாகு இந்த தகவலை தெரிவித்துள்ளது. போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களில் நெதன்யாகு இவ்வாறு தெரிவித்து இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா மற்றும் கத்தார் கூட்டாக வெளியிட்ட ஒப்பந்த விவரங்களின் படி காசாவில் கடந்த 15 மாதங்களாக நீடித்து வந்த பேரழிவு தரும் போரை இடைநிறுத்தம் செய்து, ஆயிரக்கணக்கான பணயக்கைதிகள் அவரவர் வீடுகளுக்கு செல்வதற்கான வழியைத் தெளிவுபடுத்தி உள்ளது.

இந்த போர் காரணமாக மத்திய கிழக்கு பகுதிகளில் நிலையற்ற சூழலை ஏற்படுத்தியதோடு, உலகளாவிய எதிர்ப்புகளை தூண்டியுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டதும் ஏராளமான பாலஸ்தீனியர்கள் காசா வீதிகளில் இறங்கி, ஆரவாரம் செய்து, கார் ஹாரன்களை ஒலிக்கச் செய்தனர்.

"நாம் இப்போது அனுபவிக்கும் உணர்வை, விவரிக்க முடியாத, விவரிக்க முடியாத உணர்வை யாராலும் உணர முடியாது," என்று மத்திய காசாவின் டெய்ர் அல்-பலாவில் மஹ்மூத் வாடி கூறினார்.

## இஸ்ரேல்–ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம்: உலக தலைவர்கள் வரவேற்பு!



இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுள்ளதாக தகவல் வெளியனதைத் தொடர்ந்து இந்தியா உட்பட பல உலகத்தலைவர்கள் இதனை ஆதரித்துள்ளனர். இந்நிலையில் பாலஸ்தீனிய கைதிகள் இஸ்ரேலிய பிணையக்கைதிகளை பரிமாற்றம் செய்ய இருதரப்பும் ஒப்புதல் தெரிவித்துள்ளது. இதன்மூலம் 15 மாதமாக நடந்து வரும் காசா போர் முடிவுக்கு வரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேல்-ஹமாஸ் ஆகியவை போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. பிணையக்கைதிகள் பரிமாற்றம் செய்யவும் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார்.

மேலும், இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தமானது பல கட்டமாக நடைபெறும். ஜனவரி ஆம் திகதி அமுலுக்கு வரும் இந்த ஒப்பந்தத்தின் முதல் 42 நாளில் 33 பிணையக்கைதிகளை ஹமாஸ் படைகள் விடுவிக்க உள்ளன என தெரிவித்தார்.

நவம்பர் மாதம் சாதனை வெற்றியைப் பதிவு செய்ததன் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் சாத்தியமாகியுள்ளது என விரைவில் பதவியேற்க உள்ள டொனால்டு டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இஸ்ரேல் ராணுவம் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு உலக தலைவர்கள் வரவேற்பு அளித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டரெஸ், அமெரிக்க முன்னாள் அதிபர் பாரக் ஒபாமா மற்றும் இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் உள்ளிட்ட பலர் வரவேற்றுள்ளனர்.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவுலகல பிரதேசத்தில் கடந்த வாரம் பாடசாலை மாணவி ஒருவர் சக மாணவருடன் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது வலுக்கட்டாயமாக வானில் கடத்திச் செல்லப்பட்டார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், பிரதான சந்தேகநபர் அம்பாறை நகரத்தில் வைத்து கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர், கடத்திச் செல்லப்பட்ட மாணவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அதேவேளை, மாணவியைக் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட வானுடன் அதன் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், பிரதான சந்தேகநபரின் நண்பனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கரையொதுங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

குறித்த வீட்டில் பௌத்த சமயத்தைத் தாங்கிய பல மரபு அம்சங்கள் காணப்பட்டன.

இந்நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற மருதங்கேணி பொலிஸார் அதில் காணப்பட்ட 18 புத்தர் சிலைகளையும், செப்பேடுகளையும் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிலைகள் மற்றும் பொருட்கள் தற்போது மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் இருவரும் போதை மாத்திரைகளை உட்கொண்டுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்ததையடுத்து மாணவர்களுக்கு அவற்றை விநியோகித்த நபர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட இரண்டு மாணவர்களையும் மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வட்ஸ் அப் செயலி ஊடாக மாணவர்களை உள்ளடக்கிய குழுக்கள் ஊடாக போதை மாத்திரை விநியோகங்கள் நடைபெற்று வருகின்றன என்று யாழில் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில்,

பொலிஸார் அது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனப் பல தரப்பினரும் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது நன்றியைத் தெரிவித்தார்.

அவ்வாறே, நமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொண்டு, வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவைத் தொடர்ந்து வழங்குமாறும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

## இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுமலர்ச்சி மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற துறைகள் குறித்து இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் என்று உயர்ஸ்தானிகர் எக்ஸ் தள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக நிலவும் வலுவான உறவைத் தொடர்ந்து பராமரிப்பது குறித்து விவாதித்ததாக நாமல் எம்.பி. முகநூல் பதிவில் பதிவிட்டுள்ளார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டுகாபய மன்னர் முதல் சிங்கள மன்னர்களே இலங்கையை ஆண்டுள்ளனர். எனவே, இது சிங்கள, பௌத்த தேசமாகும். எனினும், பௌத்த தர்மத்துக்கமைய நாம் அனைத்து சமயங்களையும், இனங்களையும் மதிக்கின்றோம். ஆதலால், இங்குள்ளவர்கள் எம்முடன் கைகோர்த்துப் பயணிக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் எமது கரங்களை உடைத்துக்கொண்டு செல்ல முற்பட்டால் வாழ்வதற்கு தனியான உலகை தேடிக்கொள்ள நேரிடும். அதற்காகவே 'மேர்வின் சில்வா' போன்றவர்கள் இருக்கின்றார்கள். வடக்கு, கிழக்கு, தெற்கு என்றில்லை இது ஒரு நாடு. பௌத்த சாசனம் இங்கு பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு எதிராக ஆட்சியாளர்கள் செயற்பட்டால் இயற்கை நிச்சயம் தண்டிக்கும்." – என்றார்.

# புதிய அரசமைப்பு தொடர்பில் 18ஆம் திகதி முடிவு எடுப்போம்

## வடமராட்சியில் தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவிப்பு

"புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பேசி வருகின்ற விடயம் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்துக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பேசி முடிவெடுப்போம்." – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உடுப்பிட்டி மதுபானசாலை ஏன் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என்பது தொடர்பில் வழக்கு சாட்சியமளிப்பு இடம்பெற்று வருகின்றது. நாட்டிலே அதிகரித்த மதுபானசாலைகள் தொடர்பில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதிகரித்த மதுபானப் பாவனையால் நேற்றும் பருத்தித்துறையில் வாள்வெட்டு, கத்திக் குத்து இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இன்று நீதிமன்றின் முன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. அதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலை நாட்டுக்கு நல்லதல்ல.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாக கடந்த காலத்தில் பார் லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. இலஞ்சத்தை ஒழிப்போம், பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று கூறி வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை. இவர்களும் இலஞ்சத்துக்குத் துணைபோனவர்களாகத்தான் பார்க்க முடியும். நாம் சவால் விடுகின்றோம், முடிந்தால் பார் லைசன்ஸ் விவகாரத்தை உடன் வெளியிடுங்கள். இல்லையேல் நீங்களும் ஊழல்வாதிகள்தான்.

இலங்கை விடயம் சம்பந்தமாக தி.மு.கவின் எம்.பி. கனிமொழியுடன் சந்திப்பை நடத்தியிருந்தோம். மத்திய அரசில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை குறைந்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் தீர்வு விடயத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மூன்று ஆண்டுகள் தேவை என்று கூறுகின்றது. அவ்வாறு தேவையில்லை. இது ஏற்கனவே இணங்கிக் கொண்ட விடயம். எனவே, இவ்வளவு காலம் தேவையில்லை. காலத்தை இழுத்தடிப்பது அதை இல்லாமல் செய்வதற்கான ஒரு திட்டம்." – என்றார்.

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







இதன்போது மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில், படுகாயமடைந்தவர்களில் இரண்டு ஆண்கள் உயிரிழந்தனர்.

மன்னார், நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள் (வயது 61) மற்றும் செல்வக்குமார் யூட் (வயது – 42) ஆகியோரே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த ஆண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். உயிரிழந்த இருவரும், படுகாயமடைந்த ஆண் ஒருவரும் இன்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற இருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றார் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார், நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற இரட்டைப் படுகொலையைத் தொடர்ந்து நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் இவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.01.2025 இல் வெளியிடப்பெற்றது.

# மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அரச சேவையை உருவாக்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து















“ஜனாதிபதியின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படும் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. அதைச் சிறப்பாகச் செயற்படுத்த வேண்டும். மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையை உருவாக்க வேண்டும்.” - என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

“உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானங்களைத் தமது பிரதேச மக்களின் வாழ்வாதார உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்குச் செலவு செய்யவேண்டும். அதைவிடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக்கொண்டிருக்கக் கூடாது.” - என்றும் அவர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை பொது மரக்கறிச் சந்தை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி தாரணி கஜரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், “ஒதுக்கப்படும் நிதியை உரிய காலத்தில் செலவு செய்து முடிப்பதென்பது எமக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. ஆனால், இந்தக் கட்டடத்தை மிக நேர்த்தியாக உரிய காலத்தில் நிறைவேற்றிய ஒப்பந்தக்காரருக்கு நன்றி.” - என்று தெரிவித்தார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில்,

“பௌதீக வளங்களின் முன்னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரமும் அபிவிருத்தியாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும்போதுதான் அபிவிருத்தி முழுமையடையும். எனவே, மக்களுக்குத் தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வரவேண்டும்.

தற்போது எமக்குள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபையின் செயலர் ஆகியோர் இளையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் உத்வேகத்துடனும் துடிப்புடனும் செயலாற்றுகின்றனர். இந்தப் பொதுச் சந்தைக்குரிய காணியைக் கொள்வனவு செய்து கட்டடம் அமைத்து இன்று மக்களுக்குக் கையளிக் கின்ற சபையின் செயலரையும் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன். இதேபோன்று திறம்பட பணியாற்றுவதுடன் எதிர்காலத்தில் இந்தப் பொதுச் சந்தையை பராமரிப்பதிலும்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது.” - என்றார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் நகர பிதா யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.